<u>**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,**</u>

<u>**ஜெயங்கொண்டம்.**</u>

<u>**C.C.No. 43/2016**</u>

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் நாள் திங்கள் கிழமை அரசு தரப்பு சாட்சி–01, திரு.ராமஜெயம் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் பிரமாணச்சட்டம் பிரிவு 4 ன்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராமஜெயம் | வயது | : | 48/26 |
| த.பெ/ க.பெ. | : | ராமானுஜம் | தொழில் | : | விவசாயம் |
| ஊர் | : | தேவனூர் | நிலை | : | LW01/ PW01 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**( எதிரிகள் ஆஜர் )**

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி**</u>

நான் ஏற்கனவே நீதிமன்ற முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைத் தவிர எந்த சங்கதிகளும் இல்லை. எனவே, எனது முதல் விசாரணையை நான் முடித்துக்கொள்கிறேன்.

<u>**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1) நான் என் புகாரில் 25.11.2014 ம் தேதியன்று சம்பவம் நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 22.12.2014 ம் தேதி மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அதை புகாரிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 07.01.2015 ம் தேதி மாண்புமிகு அரியலூர் மாவட்ட அமர்வு

நீதிமன்றத்தில் புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் தொடர்பாக நான் எத்தனை புகார்கள் கொடுத்துள்ளேன் என்றால் 2 புகார் கொடுத்துள்ளேன்.

2) எனது அப்பா 17.07.2012ம் தேதின்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு வாலாம்பாள் என்ற முதல் மனைவியும், இராஜாம்பாள் என்ற மற்றொரு மனைவியும் இருந்தார்கள் என்றால் சரிதான். முதல் மனைவி வாலாம்பாள் என்பவருக்கு ஒரு மகன் உள்ளார் என்றால் சரிதான். இரண்டாவது மனைவி இராஜாம்பாளுக்கு நான் உட்பட நான்கு வாரிசுகள் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு 30, 40 ஏக்கர் நிலமும், வங்கியில் லட்சக் கணக்கில் சேமிப்பும் உள்ளது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு வாரிசு சான்று கோரி நான் மனு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். நான் வட்டாட்சியரிடம் கொடுத்த மனுவின் அடிப்படையில் எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலரும், வருவாய் ஆய்வாளரும் யார் யார் வாரிசுகள் என்பது குறித்து விசாரணை செய்து, வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்பி வைத்தார்கள் என்றால் சரிதான்.

3) அந்த வாரிசு விவரத்தில் எனது அம்மா இராஜாம்பாள் பெயரும் அதில் இருந்தது என்றால் இல்லை. 1வது எதிரியிடம் மேற்படி மனு பரிசீலனையில் இருந்தது என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் கொடுத்த அறிக்கையில் எனது அம்மாவின் பெயர் தவறாக கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அதை நீக்க வேண்டும் என்றும், 1வது எதிரி சொன்னதால், எனக்கும் அவருக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல.வாரிசுகள் சான்றுகள் சம்மந்தமாக நான் 1வது எதிரிக்கு எதிராக லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் கொடுத்து, அந்த புகாரின் பேரில் அரியலூர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கு விசாரணையில்

நான் அரியலூர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான்.

4) நான் மேற்படி விசாரணையில் நீதிமன்றத்தில், " நான் RI எல்லாம் என் அம்மாவை சேர்க்கும்படி எழுதிக் கொடுத்துள்ளார்கள், அதனால் நீங்கள் எப்படியாவது என் அம்மாவையும் சேர்த்து வாரிசு சான்று வாங்கிக்கொடுங்கள் என்றும், அதற்கு நான் பணம் கொடுத்துவிடுகிறேன் என்றும் கேட்டதற்கு எதிரி எரிச்சலடைந்து, நீ படித்தவன்தானே, முட்டாள் மாதிரி பேசுகிறாயே சட்டப்படி முடியாததை எவ்வாறு செய்ய முடியும் என்று கேட்டார்" என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு விசாரணையில் எதிரிக்கு தண்டனை வழங்கப்பட்டது என்றால் சரிதான். பின்னர், மேற்படி வழக்கானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டு, அதில் 1வது எதிரி விடுதலை செய்து, தீர்ப்பு பகரப்பட்டது என்றால் சரிதான்.

5) நான் தற்போது நீதிமன்ற முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளைத்தான் புகாரிலும், போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது புகாரிலும், முதல் விசாரணையிலும் 1வது எதிரி என்னிடம் நேரில் சமாதானமாகப் போகச் சொன்னதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். எந்த தேதியில், எந்த இடத்தில் கேட்டார் என்று குறிப்பிட்டுபுகாரிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 2, 3 எதிரிகள் ஆண்டிமடம் தாலுக்கா தேவனூரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 1வது எதிரி அரியலூர் தாலுக்கா பாளையங்குடி கிராமத்தைச் சேர்ந்தவர் என்றால் சரிதான்.1வது எதிரிக்கும் 2,3 வது எதிரிகளுக்குமிடையே உறவு முறையோ அல்லது வேறு எந்த தொடர்பும் இருந்ததாக என் புகார் மனுவிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். 1வது

எதிரிக்கு இந்த வழக்கின் சம்மன் வந்து, நீதிமன்றத்தில் ஆஜரான பின்புதான் 2, 3 எதிரிகளைத் தெரியும் என்றால் சரியல்ல.

6) 25.11.2014ம் தேதி முதல் இன்றுவரை 1வது எதிரி ரூ.10,000/- தருகிறேன் சமாதானமாக செல்லும்படி நேரிலோ அல்லது 2, 3 எதிரிகள் உட்பட எவர் மூலமாகவோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது புகாரில், 1வது எதிரி ரூ.1 லட்சம் மாயவேலிடம் பணம் கொடுத்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது புகாரில் சொல்லியுள்ளவாறு, எந்த தேதியிலும், 1வது எதிரி என்னிடம் ரூ.1 லட்சம் கொடுப்பதற்கு மாயவேல் மூலமாகவோ அல்லது வேறு நபர்கள் மூலமாகவோ அணுகவில்லை என்றால் சரியல்ல. எனது ஊரில் மிகவும் வசதியான செல்வாக்கான முன்னாள் தலைவர் சுப்பிரமணியனும், பா.ம.க.வில் மிகவும் செல்வாக்கான முன்னாள் தலைவர் செல்வராஜ் என்பவரும் உள்ளார்கள் என்றால் சரிதான்.

7) 2, 3 எதிரிகள் எந்த தேர்தலிலும் நிற்கவில்லை என்றாலும் சட்டப்பூர்வமான பதவி வகிக்கவில்லை என்றாலும் சரிதான். அவர்கள் இருவரும் எங்கள் ஊர் நாட்டார்கள் ஆவார்கள். எனது புகாரில் சொல்லியுள்ளவாறு 1வது எதிரியால் என் உயிருக்கு எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி இவ்வழக்கு உட்பட எல்லா வழக்குகளையும் நீதிமன்றத்தின் மூலம் நேர்மையான முறையில் அணுகக்கூடியவர் என்றாலும், தவறான வழியில் அணுகமாட்டார் என்றாலும் சரியல்ல. நான் புகாரிலும், முதல் விசாரணையிலும், இறுதியறிக்கையிலும் சொன்னதுபோலான குற்றத்திற்கும் 1வது எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1வது எதிரி எனது அம்மாவை வாரிசு சான்றிலிருந்து நீக்க கோரியதால், நான் அவர் மீது பொய்யான புகார்கள் கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல.

**<u>2, 3 எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் ITI படித்துள்ளேன். எனக்கு நன்றாக எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் எனது குடும்ப சம்மந்தமாக எத்தனை சிவில் வழக்குகள் நான் நடத்தி வருகிறேன் என்றால் நிறைய வழக்குகளை நான் நடத்தியுள்ளேன். 2012ம் ஆண்டிற்கு முன்பு என் தந்தை நீதிமன்றத்திற்கு வழக்கிற்காக வரும்போது நானும் அவருடன் வந்து வழக்கு விவரங்களை தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான்.

2) எனது குடும்ப சொத்து சம்மந்தமாக உயர் நீதிமன்றத்தில் எத்தனை வருடங்களாக வழக்கு நடந்து வருகிறது என்றால் 3 வருடங்களாக நடந்து வருகிறது. புகார் மனுவை நான் கைப்பட எழுதி, கணினியில் தட்டச்சு செய்துதான் கொடுப்பேன். வழக்கறிஞர் இல்லாமல் நேரடியாக நீதிமன்றத்தில் நிறைய மனுக்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கும் என் எதிர் வீட்டைச்சேர்ந்த இளையபெருமாள் என்பவருக்கும் பொழி சம்மந்தமான பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். நான் சர்வேயரை வைத்து இடத்தை அளந்த சமயத்தில் 2, 3 எதிரிகள் அங்கு வந்தார்கள் என்றால் இல்லை.

3) எனக்கும் இளையபெருமாளுக்கும் பொழி பிரச்சனை ஏற்பட்டு, நான் பலமுறை இளையபெருமாளிடம் பிரச்சனை செய்து, நில அளவையர் வைத்து அளவீடு செய்யும் சமயத்தில் பொதுவான ஆட்கள் என்ற முறையில் 2, 3 எதிரிகள் அங்கு வந்தார்கள் என்றாலும் அவர்கள் இளையபெருமாளுக்கு ஆதரவாக உள்ளார்கள் என்று நினைத்து, அவர்கள் மீது

பொய்யான புகாரை கொடுத்து வருகிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கும் 2, 3 எதிரிகளுக்கும் எத்தனை வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்தது என்றால் 2015ம் ஆண்டிலிருந்தே இல்லை.

4) எனக்கும் செல்வக்குமாருக்கும் எப்போதிலிருந்து பேச்சு வார்த்தை இல்லை என்றால் 10 வருடங்களாக இல்லை. எனக்கும் மாயவேலுக்கும் எப்போதிலிந்து பேச்சு வார்த்தை இல்லை என்றால் எனது திருமணத்திலிருந்து பேச்சு வார்த்தை இல்லை. எனது திருமணத்திலிருந்து எனக்கும் மாயவேலுக்கும் பேச்சு வார்த்தை இல்லாததால்,அவர் என்னை கூப்பிட்டு பஞ்சாயத்து பேசுவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனது ஊருக்கும் 1வது எதிரி ஊருக்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்குமென்றால் 10 கி.மீ. தொலைவு இருக்கும். இரண்டு ஊர்களுக்கும் இடையே 25 கி.மீ. தொலைவு இருக்கும் என்றால் சரியல்ல. 1வது எதிரிக்கும் 2, 3 எதிரிகளுக்கும் இடையே என்ன தொடர்பு என்று நான் புகாரிலோ, முதல் விசாரணையிலோ, போலீசார் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

5) 2, 3 எதிரிகள் 1வது எதிரிக்காக பஞ்சாயத்து செய்ய வேண்டிய அவசிமில்லை என்றாலும் அவர்களுக்கு 1வது எதிரியை யாரென்றே தெரியாது என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் 2வது எதிரி என்னிடம் ரூ.10,000/ அல்லது ரூ.1லட்சமோ 1வது எதிரிக்காக தருவதாக எந்த காலத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2, 3வது எதிரிகள் சேர்ந்து அவர்கள் வீட்டிற்கு என்னை பஞ்சாயத்திற்கு கூப்பிட்டதாக புகாரில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 2வது எதிரியின் வீட்டைச் சுற்றி எவ்வளவு வீடுகள் இருக்கும் என்றால் நிறைய வீடுகள் உள்ளன. 2வது எதிரி என்னை அழைத்து பேசிய விவரம் அங்கு வசிப்பவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். 2வது எதிரி

என்னை அழைத்து பேசிய விவரம் யார் யாருக்கு தெரியும் என்ற விவரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. உண்மையிலேயே 2வது எதிரி என்னை அழைத்து பேசியிருந்தால் அந்த விவரம் சந்திரா, தமிழ்செல்வன் ஆகியோருக்கு தெரியும் என்று நான் புகாரில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், 2, 3 எதிரிகள் என்னை அழைத்து மிரட்டவில்லை என்றாலும் சரியல்ல.

6) எனது அப்பா இறந்ததற்கு 2, 3 எதிரிகள் இருவரும் கலந்துகொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனது ஊரில் நிறைய நபர்கள் எனக்கு பயந்துக்கொண்டு எங்கள் வீட்டு காரியத்தில் கலந்துக்கொள்வது இல்லை என்றால் சரியல்ல.

உண்மை நகல் /
ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.